திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, என்னிடம் வாருங்கள், நான் இளைப்பாருதல் தருகிறேன்' என்று ஏசு பிரான் கூறியிருக்கிறார்கள். அதைப்போல, புரட்சித் தலைவி அவர்களிடத்திலே நாங்கள் வரும்போது, அவர்கள் எங்களுக்கு இளைப்பாருதல் தருகிறார்கள். அதுபோல, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் நல்ல அமைச்சர் என்று நன்றாகப் பெயர் வாங்கிக் கொண்டிருக்கும் எனது திருச்சி மாவட்ட அமைச்சர் அவர்கள், அங்கே ஒரு வேளாண்மைக் கல்லூரியை அமைக்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொண்டு, அதற்கு விடை அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் நிறைய திட்டங்களை, புரட்சித் தலைவியின் அரசு செய்து கொண்டு இருக்கிறது. உப்பிலியாபுரத்திலே உள்ள பச்சைமலையிலே மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். அந்த மலைவாழ் மக்களுடைய மேம்பாட்டிற்கு பல்வேறு திட்டங்களை அரசு வழங்கி, தொடர்ந்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள், இந்தச் சட்டப்பேரவைக் கூட்டம் முடிவுற்று தன்னுடைய தொகுதிக்குச் செல்கிறபோது, இந்தத் துறை வழங்கக்கூடிய சலுகைகளை எல்லாம் அந்த மலைவாழ் மக்களுக்குக் கிடைக்கின்ற வகையிலே அவர்கள் பெற்றுத் தருவார்கள் என்று சொன்னால், அதுவே, அந்தத் தொகுதிக்கு மிகப் பெரிய பயனைத் தரும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 536, திரு. டி. எம். ரங்கராஜன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

536—

மைலாப்பூர் தொகுதியிலுள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளைப் பழுது பார்த்தல்.

*16900—திரு. டி. எம். ரங்கராஜன் :
மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மைலாப்பூர், பல்லக்குமானியம், நொச்சிக் குப்பம், சீனிவாசபுரம், டுமிங்குப்பம், விசாலாட்சி தோட்டம், நாட்டான் தோட்டம் போன்ற பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான பழுதடைந்த வீடுகளை பழுது பார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1993 ஏப்ரல் 29]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னை, மைலாப்பூர் பல்லக்குமானியம், நொச்சிக்குப்பம், சீனிவாசபுரம், டூமிங்குப்பம், விசாலாட்சி தோட்டம் மற்றும் நாட்டான் தோட்டம், ஆகிய 6 குடிசைப்பகுதி மாற்று வாரியத் திட்டப்பகுதிகளில் 4,586 குடியிருப்புகளை ஹட்கோ கடனுதவியுடன் ரூ. 48.21 இலட்சம் செலவில் பழுது பார்க்கும் பணியை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று சொன்னார்கள், அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், இந்த வேலைகள் எப்போது நடத்தப்படும், மீனவர்கள் அதிகம் வாழ்கின்ற பகுதியாக இருக்கின்ற நொச்சிக்குப்பம். சீனிவாசபுரம். டூமிங்குப்பம் பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதிகளை எல்லாம் மீன் வளர்ச்சிக் கழக வாரியத்திடம் ஒப்புவித்து அதை பராமரிப்பதாக சொல்லப்படுகிறது. இது பற்றி அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஹட்கோ நிதி உதவி அல்லாத 1980 ஆம் ஆண்டுவரை கட்டப்பட்ட சுமார் 30,764 குடியிருப்புகளை 4 கோடியே 57 லட்சத்து 20 ஆயிரம் திட்ட மதிப்பீட்டில் ஹட்கோ நிதி உதவியுடன் பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்ளும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது, இந்தத் திட்டத்தின் கீழ் வருகின்ற நிதி ஆண்டில் 1993-94 ஆம் ஆண்டு சுமார் 30,764 குடியிருப்புகளில் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ள ரூ. 1 கோடியே 93 லட்சம் செலவிடப்பட மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கிறது, இந்தத் திட்டத்தின் கீழ் சென்னை, மயிலாப்பூர் பகுதியில் மட்டும் நொச்சிக்குப்பத்தில் 786 குடியிருப்புகள் சுமார் 10 லட்சத்து 10 ஆயிரம் செலவினத்திலும். பல்லக்குமானியத்திலே 1,272 குடியிருப்புகள் சுமார் 5 லட்சத்து 68 ஆயிரம் செலவினத்திலும். சீனிவாசபுரத்தில் சுமார் 1,356 குடியிருப்புகள் 17 லட்சத்து 63 ஆயிரம் மதிப்பீட்டிலும், டூமிங்குப்பத்தில் 276 குடியிருப்புகள் 6 லட்சத்து 47 ஆயிரம் மதிப்பீட்டிலும், அதைப்போல, விசாலாட்சி தோட்டத்தில் சுமார் 646 குடியிருப்புகள்

6 லட்சத்து 81 ஆயிரம் மதிப்பீட்டிலும், நாட்டான் தோட்டத்தில் 250 குடியிருப்புகள் சுமார் 1 லட்சத்து 52 ஆயிரம் மதிப்பீட்டிலும், மொத்தம் 4,586 குடியிருப்புகள் 48 லட்சத்து 21 ஆயிரம் மதிப்பீட்டிலும் இந்த ஆண்டே வருகிற நிதி ஆண்டிலே எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மயிலாப்பூரைப் போல, தியாகராய நகர் தொகுதியில் உள்ள நல்லாங்குப்பம், காமராஜர் காலனி, சுபேதார் தோட்டம் போன்ற பகுதிகளும் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில். மயிலாப்பூர் பகுதியில் உள்ள பல்லக்கு மானியம் நொச்சிக்குப்பம் போன்ற பகுதிகளுக்கு மட்டுமே தவிர. தியாகராய நகர் பகுதிக்கு அல்ல, இருந்த போதிலும் வருகின்ற நிதி ஆண்டிலே இந்தப் பழுதுபார்க்கும் பணிகள் சுமார் 1 கோடியே 93 லட்சம் செலவில் மேற்கொள்ள இருக்கின்ற காரணத்தால். தியாகராய நகர் பகுதிக்கும். (குறுக்கீடு) ஆயிரம் விளக்கு பகுதி கூட இதிலே வருகிறது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆயிரம் விளக்கு சைதாப்பேட்டை, எழும்பூர் எல்லாமே சொல்லி விட்டால் நல்லது (குறுக்கீடு), சைதாப்பேட்டைக்கும் உண்டு என்று சொல்லிவிட்டார்,

Hon Thi u T. M. SELVAGANAPATHY : Almost about 30,764, tenements wlll be repaired.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் பீட்ரிக் டி' சோசா.

முற்பகல் 11-05

Dr. BEATRIX D. SOUZA : Honourable Speaker "Sir" I would like to know whether the upkeep of low cost Govt.housing will come under Vision-2000 meant to beautify the City.

HOH. THIRU T. M. SELVAGANAPATHY: Honourable Speaker 'Sir' Hon. Member D, Souza may put a Seperate question for a detailed answer.

1993 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 537 திருமதி அ.தி. சரஸ்வதி, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்,

537—

சத்தியமங்கலம் தொகுதி உடல் ஊனமுற்ற குழந்தைகள், முதியோர்களுக்கு ஊன்றுகோல், சக்கரவண்டி, தையல் மெஷின் ஆகியவை வழங்கல்.

*9271—திருமதி அ.தி. சரஸ்வதி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் தொகுதி மலைப்பகுதியாக இருப்பதால் அங்குள்ள உடல் ஊனமுற்ற குழந்தைகள், முதியோர்களுக்கு ஊன்றுகோல், சக்கரவண்டி, தையல்மெஷின் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆவன செய்யும்.

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் ஆட்சியில் தமிழகத்தில் அரசு தொட்டில் வளர்ப்பு குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவு, உடல் ஊனம் உற்றோருக்கு சைக்கிள்கள் எத்தனை வழங்கப்பட்டிருக்கிறது, தையல் மெஷின்கள் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது, முதியோருக்கு உதவித் தொகை எத்தனைபேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது, அரசு இலவச திருமண உதவித்தொகை எத்தனைபேருக்கு. (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கெல்லாம் தனிக் கேள்வி போட வேண்டும். உங்கள் தொகுதிபற்றி ஏதாவது இருந்தால் கேளுங்கள்.

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி மலைவாழ் மக்கள், ஏழை மக்கள் மிகவும் அதிகம் வாழும் தொகுதியாகும். அந்த ஏழைகளின் வாழ்வு கருதி உடல் ஊனம் உற்றோர் இல்லம், அநாதை இல்லம், முதியோர் இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மலைப் பகுதியாக அவர் தொகுதி இருப்பதால்